**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**S.T.C.No.1269/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW1 | Examined as : PW 1 | |
| Name | : ஈழவளவன் | Defence | : |
| Father Name | : மாரிமுத்து | Court | : |
| Village | : அரிவேளூர், இலந்தங்குடி. | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 49 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 07.10.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

(எதிரி தரப்பில் மசா1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.M.P. No.1531/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள முகவரியில் தான் வசித்து வருகிறேனா என்றால் மயிலாடுதுறையில் உள்ள எனது அலுவலகத்திலும் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியிலும் வசித்து வருகிறேன். எதிரிக்கு எந்த தேதியில் நான் ரூ.7,00,000/- கடன் கொடுத்தேன் என்றால் 02.10.2020 அன்று அரிவேளூர் மெயின் ரோட்டில் உள்ள எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் பணம் கொடுத்த சமயத்தில் யார், யார் அங்கு இருந்தார்கள் என்றால் தமிழ்செல்வன், பாரதிமோகன் ஆகியோர்கள் இருந்தார்கள். எதிரி எனது இளைய சகோதரியின் கணவர் வழி உறவினர் ஆவார். எனது இளைய சகோதரி விஜயலெட்சுமியின் வளர்ப்பு மகன் தான் எதிரி என்றால் சரியல்ல. எதிரியின் திருமணத்தை நானும், எனது சகோதரியும் தான் முன்னின்று செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. எதிரி சென்னையில் வசித்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி அவரது தொழில் தேவைக்காக என்னிடம் இதற்கு முன்பு பணம் பெற்றுள்ளாரா என்றால் ரூ.20,000/-, ரூ,30,000/- என்று அவருக்கு தேவை ஏற்படும்போதெல்லாம் கேட்பார் கொடுப்பேன். என்ன தொழில்

செய்து வருகிறீர் என்றால், விவசாயம், மீன் வளர்ப்பு, தென்னை, வாழை போன்றவற்றை விற்பனை செய்து வருகிறேன்.

மேற்படி தொழிலுக்கு வருமான வரி செலுத்தி வருகிறீர்களா என்றால் விவசாயம் சம்பந்தப்பட்டதால் வருமான வரி செலுத்துவது இல்லை. எதிரி எனக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எதிரி அழைத்துவந்த நபர்கள் தான் செய்தார்கள். எதிரி ஒரு நபரை அவரது டிரைவர் என கூறினார். மற்றொரு நபர் யார் என்று தெரியாது. கடனுறுதிச்சீட்டில் உள்ள சாட்சிகளின் முகவரியை நான் பார்த்தேனா என்றால் எதிரியின் கையொப்பத்தை மட்டும் கவனித்தேன். சாட்சிகளின் முகவரி தற்போது நினைவில் இல்லை. எதிரிக்கு நான் கடனாக கொடுத்த தொகை எனது கையிருப்பில் இருந்த தொகையைதான் கொடுத்தேன். எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றாலும், எதிரியின் திருமண வரவுசெலவுகளை என்னிடம் கேட்டதால் தான் அவர் மீது பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், எதிரியின் வளர்ப்பு தந்தையும், பாரதியும் மற்றும் சிலரும் எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது காசோலையையும், புரோநோட்டையும் எடுத்துவந்துவிட்டோம் என்றால் சரியல்ல.

நான் எதிரியின் வீட்டிலிருந்து எடுத்துவந்த காசோலையை வைத்து எனது டிரைவர் அறிவழகன் மூலம் மயிலாடுதுறை விரைவு நீதிமன்றத்தில் ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கார் ஓட்டுனர் அறிவழகன் இல்லை. எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றாலும், எதிரி எனது உறவினர் என்பதால் அவரது அலுவலகத்திலிருந்து காசோலை எடுத்து வந்து அவர் மீது பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எந்தவித கொடுக்கல் வாங்கலும் என்னிடம் வைத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல.